16₅23

உ

# 70 ஆம் ஆண்டு விழா அறிக்கை மலர்



ஸ்ரீ சரசுவதி சங்கம், புதுவயல்

**9-9-1992**

உ

சிவமயம்

முத்தமிழ் முழங்குக

# 70ஆம் ஆண்டு விழா

# அறிக்கை மலர்

## காணிக்கை



அமரர்

பெரி. சித. இராமசாமி செட்டியார்

நிறுவனர், முன்னாள் தலைவர்

வெளியீடு :-

மாண்புமிகு S. ரகுபதி B Sc B.L அவர்கள்

தொழிலாளர் நல அமைச்சர்

தமிழ்நாடு

ஸ்ரீ சரசுவதி சங்கம் - புதுவயல்

9-9-92

# வாழ்த்து!

பொன்னும் கலையும் பொதுநலமும்
பொங்கிப் பொலியும் புதுவயலில்
அன்னை தேவி சரஸ்வதி பேர்
அமைந்த சங்கம் அழகாக
வன்னத் தோகை மயில் மீது
வருமா முருகன் திருவருளால்
மன்னும் உலகில் நீடூழி
வாழ்க வாழ்க வாழ்கவே.

ஞாலம் புகழ் வித்யா சாலை புதுவயலில்
சாலச் சிறந்து தழைக்குமே—சீலமிகு
தக்கார் பெரியார் சரஸ்வதி சங்கத்தார்
எக்காலும் போற்ற இனிது.

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

தங்கத் தணல் போலச் சக்தியுடன் பொலியும்
சங்கர னருளாற் சந்ததமும்—மங்கலம்
பொங்கும் புதுவயலிற் போந்த சரசுவதி
சங்கம் வளர்க தழைத்து.

**சுத்தானந்த பாரதியார்**

சர்சுவதி சங்கம் தோற்றிய பள்ளி
சரசுவதி வித்தியா சாலைநற் பள்ளி
வரந்தரு கலைமகள் வளர்த்திடும் பள்ளி
வானவர் வந்து வணங்கிடும் பள்ளி
'காரை' திருத்தக் கட்டிய 'ஷெட்டில்'
கல்விப் பயிரை நாட்டிய பள்ளி
ஊரைக் கவரும் உயர்ந்தோர் பலரை
உலகிற் கீந்த உத்தமப் பள்ளி

—'சிந்தனைக் கவிஞர்' **பெரி. சிவனடியான்**

உ.

முத்தமிழ் முழங்குக!

# ஸ்ரீ சரசுவதி சங்கம் - புதுவயல்

**70-ஆம் ஆண்டு அறிக்கை**

பொன்னும் கலையும், பொது நலமும் பொங்கிப் பொலியும் புதுவயலில், இன்னருஞ் செல்வி கலைமகளின் இனிய பெயரால் அமைந்திட்ட சரசுவதி சங்கம், முடியுடை மூவேந்தர் வளர்த்த முத்தமிழைக் காக்கும் முகந்தான் எழுந்த முதல் முயற்சி. முச்சங்கப் பணியின் பின் தொடர்ச்சி. ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் தமிழ் வளர்க்கும் உள்ளத்தால் கடமை செய்யும் ஆர்வத்தால், சாலிவாகன சகம் 1845 கலி 5024 துந்துபி ஆண்டு ஆடித் திங்கள் 9-ஆம் நாள் (22-7-1922) திங்கட்கிழமை அமாவசை திதி பூச நட்சத்திரம் அமிர்த சித்தயோகம் கூடிய மாலை நல் வேளையில் திரு. அ.மு.வீர. கட்டிடக்கேட்டில் திருவருட் பொலிவும், தமிழன்னையின் தண்ணளியும் துணை செய்ய இந்நகர்ப்பேரன்பர்கள் திரு. சா. சிதம்பரம் செட்டியார் அவர்கள், திரு பெரி. சித. இராமசாமி செட்டியார் அவர்கள், திரு. பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார் அவர்கள் ஆகிய மூவர்களின் நன்முயற்சியால் ஸ்ரீ சரசுவதி சங்கம் நிறுவப் பெற்றது.

சங்கத்தின் கால்கோள் விழாவிற்கு கோட்டையூர் திரு. அ. ராம. அ. கருப்பஞ் செட்டியார் அவர்கள் (ஏ. கே செட்டியார், ஆசிரியர் குமரி மலர்) தலைமை தாங்க, அறிஞர் பலர் சொற்பொழிவாற்றினர். அன்றைய சங்கத்தினர் எண்ணிக்கை 9 ஆரம்பச் சந்தா வருடம் ஒன்றுக்கு 12 அணா.

திரு. ஏ. கே. செட்டியார் அவர்கள் தோற்றுவித்த சங்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, இன்று உலகோர் புகழ் உயர்தமிழறிஞர்கள் வாழ்த்துரைக்க ~~எழுபதாம் ஆண்டு விழாவைக் காண்கின்~~றது. திரு. அ. மு. வீர. அவர்கள் கட்டிடக்கேட்டில் பிறந்த சங்கம், திரு. அ. ப. சி. மு சி. அவர்கள் கட்டிடக்கேட்டிலும், திரு. பெ.ப.வி.சித. பங்களா மேல்மாடியிலும், திரு. பெரி.சித. ராம அவர்கள் கட்டிடக்கேட்டிலும் சிறுநடையிட்டுத் தவழ்ந்தும், திரு. யெ. பெரி. அவர்கள் பங்களாக் கேட்டில் இளமையின் வளர்வு எய்தியும், இன்று தான் தோற்றுவித்த ஸ்ரீ சரசுவதி வித்யா சாலையின் கவின்மிகு கட்டிடத்தில், தனக்கென

ஒதுக்கப்பட்ட அரங்கில் (அறையில்) அழகு நடையிட்டுத் தலைமை பூண்டு அருங்கலைகளை வளர்த்து வருகிறது. ஒன்பது அங்கத்தினர் களுடன் தோன்றிய சங்கம் இன்று ஏன்பதுக்கு மேற்பட்ட அங்கத்தினரைப் பெற்றுச் சீரோடு வளர்ந்து வருகிறது.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதைத் தலையாய குறிக்கோளாகக் கொண்டு தோன்றிய சங்கம், பின்னர் கல்வித் தொண்டுக்குச் சிறப்பிடம் கொடுத்து, இன்று இரு கல்விக் கழகங்களைத் தோற்றி, தன் பணியைச் செய்து வருகிறது. சங்கம் தான் தோன்றிய பத்தாண்டில் அதாவது, ஆங்கிரஸ ஆண்டு தைத் திங்களில் (16-1-1933) ஸ்ரீ சரசுவதி வித்யாசாலை என்ற திருப் பெயரில் தொடக்கக் கல்வி நிலையத்தைத் தோற்றுவித்தது. பின்னர் தன் மணி விழாவில் அதாவது, 1-7-82ல் ஸ்ரீ சரசுவதி வித்யா-சாலை பெண்கள் உயர்நிலைப் பள்ளி என்ற உயர்கல்வி நிறுவனத்-தைத் தோற்றி, விறு நடைபோட்டு வருகிறது.

தொடக்க காலத்தில் தமிழ்ச் சுவடிகளைப் பதிப்பித்தல் பணி-களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சங்கம், ''உமையாம்பிகை நவரெத்தின ஆசிரியம்'' – என்ற நூலைப் பதிப்பித்தது. அத்துடன் ''உய்யவந்த அம்மனின் உத்தரவு'' ''சைவம் பிடிக்கக் கூடாதா?'' ''என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்பன போன்ற நூல்களையும் வெளியிட்டுத் தமிழ்ப் பணி செய்தது. அத்துடன் ஆண்டாண்டு தோறும் அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடுவதோடு, வெள்ளிவிழா நிறைவாக அரிய பெரிய மலர்களையும் வெளியிட்டுத்தொண்டாற்றி வருகிறது.

ஆண்டு தோறும் கலையன்னைக்கு எடுக்கும் கலைமகள் விழாவில் சங்கத்தின் எழுந்தருள் தெய்வமான வெள்ளிக் கலைமகள் நகர்வலம் வருவது குறிப்பிடத்தக்க விழாவாகும். ~~இத்துடன் தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல் விழா ஆகியவையும், சிறப்புறக் கொண்டாடப் பெறுகின்றன.~~ எழுபதாண்டைக் காணுகின்ற சங்கம், ஆண்டுதோறும் முத்தமிழ் விழா எடுத்து, நற்றமிழ்ப் பணி செய்து வருகிறது. அன்று முதல் இன்று வரை தமிழகத்தில் வாழ்ந்த, வாழுகிற தமிழறிஞர்கள் வருகை தந்து தமிழமுது தந்திருக்கிறார்கள்; தருகிறார்கள். சங்கத்தில் தமிழ்ச் சுவை தராத, வரலாற்றில் இடம் பெற்ற தமிழறிஞர்கள் இல்லையென்றே கூறலாம். குறிப்பாக, செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. தமிழ்த் தென்றல் திரு. வி. க. சுவாமிசித்பவானந்தா இதழியலார் கல்கி, இரசிகமணி டி.கே.சி. தமிழ்ப்பேராசான் மு.வ. சித்தாந்தச் செம்மல் சச்சிதானந்தம்பிள்ளை,

தமிழ்க் கடல் ராய. சொ. விஞ்ஞானி கே. எஸ். கிருஷ்ணன், வழக்கறிஞர் ஆர்.பி. சேதுப்பிள்ளை, பன்மொழிப்புலவர் சீனிவாச ராகவன் இன்னோரன்ன பெருமக்கள் நினைவு கூரத்தக்கவர்கள். ஓராண்டு கூட விடாது, எழுபதாண்டும் விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன. விழாத் தலைவர்கள் பட்டியல் தனியே தரப் பெற்றிருக்கிறது.

தமிழறிஞர்கள் சுவையமுது தருவதோடு, தன் நிறுவனங்களில் பயிலுகின்ற மாணவ மாணவியர்களுக்குத் தமிழ் உணர்ச்சியூட்ட இலக்கியப் போட்டிகள் நடத்தப் பெற்றுப் பரிசுகளை அள்ளியள்ளி வழங்குவதும் சங்கத்தின் தலையாய தொண்டாகும். தமிழ்ச்-சான்றோர்களைப் பாராட்டுதல் என்பதும் சங்கத்தின் மற்றொரு தொண்டாகும். வித்யாசாலையின் பழைய மாணவர் சிந்தனைக் கவிஞர் பெரி. சிவனடியான் அவர்களின் கவிதை நூலை 15-8-85ல் வெளியிட்டு அவர்களைப் பாராட்டிச் சிறப்பித்தது. சங்கச் செயலர் டாக்டர். பழ. முத்தப்பன் அவர்கள் தத்துவத் துறையில் 'முனைவர்' பட்டம் பெற்றமைக்காக, 15-8-86ல் பாராட்டிச் சிறப்பிக்கப் பெற்றார்கள். 'மாதவமேகலை' என்ற காப்பியம் பாடிப் பரிசு பெற்ற 'கவிஞர் மீனவன்' அவர்கள், 15-8-87ல் பாராட்டுப் பெற்று-சிறப்பிக்கப் பெற்றார்கள். கடந்த ஆண்டு அழகப்பப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பதவியேற்ற, டாக்டர். கா. நாகப்பன் அவர்கள் சிறப்பு நிகழ்ச்சி ஆக்கத்தால் பாராட்டப் பெற்றார்கள்.

இத்தகைய அரும்பணிகளைச் செய்து வரும் சங்கம், தற்பொழுது, உறுப்பினர் கட்டணத்தை மாற்றி ஆயுள் உறுப்பினர் கட்டணம் என்ற முறையில் ரூ. 50/- உறுப்பினரிடம் பெற்று வைப்பு நிதியாக்கி, விழாச் செலவுகளைச் செய்து வருகிறது. ஆண்டுவிழாச் செலவுக்கென உள்ளூர் அன்பர் ஒருவர் ரூ. 5000/- வைப்பு நிதி அளித்துள்ளார்கள். சங்கத்தின் மேடையில் பெண் வேடமிட்டு நடித்ததாலேயே சுந்தரி வீரப்பன் என்று அழைக்கப் பெறுகிற அன்பர் கதி. வீரப்பச் செட்டியார் அவர்கள் தன்னுடைய பேரன் வீரப்பனின் திருமணத்தை முன்னிட்டுத் திருமணநாளில் (23-5-92) ரூ. 5000/- நன்கொடை அளித்திருக்கிறார்கள். அவ்வப்போது, சங்கத்து உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் அளிக்கின்ற நன்கொடைகள், உறுப்பினர் கட்டணங்கள் மேற்குறிப்பிட்ட வைப்பு நிதிகளின் வட்டித் தொகைகள் ஆகியவற்றைக் கொண்டு விழாக்கள் நடத்தப் பெறுகின்றன.

சங்க அன்பர்கள் ஒன்று கூடிப் பொதுக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட செயற்குழுக்களால் சங்கத்தின் கிளை நிறுவனங்களாகிய ஸ்ரீ சரசுவதி வித்யாசாலையும் பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் நிர்வகிக்கப் பெற்று வருகிறது.

இரு செயற்குழுவின் பட்டியல்களும் தனியே தரப்பெற்றுள்ளன. பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் அறிக்கையும் தனியே தரப்பெற்றுள்ளது. அது போல, சங்கம் நடத்தும் போட்டிகளுக்கு வைப்புநிதி தந்துள்ள வள்ளல் பெருமக்களின் பட்டியலும், இவ்வறிக்கையில் தரப் பெற்றுள்ளது.

கடந்து வந்த பாதையையும், எதிர்நோக்கியுள்ள காலத்தையும் இந்த நேரத்தில் நினைவு கூர்ந்து ஆதரவு தந்த அனைவருக்கும், ஆதரவு தர இருக்கும் அனைவருக்கும் நன்றி கூறி இவ்வறிக்கையை நிறைவு செய்கிறோம்.

| தலைவர் | செயலர் |
|---|---|
| சித. ராம. சிதம்பரம் | பழ. முத்தப்பன். |

## சங்க உறுப்பினர்கள்
## ஆயுள் உறுப்பினர்கள்

1 திரு. சித. ராம. சிதம்பரம் பி.இ.
2. ,, பெ. பெரி. வீர. சோலையப்பன்
3. ,, டாக்டர். வீர. இராமநாதன் எம்.எஸ்ஸி,பி.எச்.டி.
4. ,, வீர. வீர. சோலையப்பன் பி.எஸ்ஸி.
5. ,, வீர நாராயணன் பி.இ
6. ,, வீர. பழமலை
7. ,, வி. பழனியப்பன் எம்.ஏ.
8. ,, பழ. ஏகப்பன் பி.காம்.
9. ,, மு.பெரி. சின்னக் கருப்பன்
10. ,, கு.இராம.வீர. இராமசாமி
11. ,, சித.இராம. இராமநாதன் பி.எஸ்ஸி

12. திரு. பெரி. அழகப்பன்
13. ,, பழ. ரெங்கநாதன் எம்.காம்.
14. ,, சுப. வீர. சுப்பிரமணியன்
15. ,, குழ. உடையப்பன்
16. ,, பழ. முத்தப்பன்
17. ,, மெ. சித. மெய்யப்பன் பி.இ.
18. ,, சித. இராம. பெரிய கருப்பன்
19. ,, ப.மு.நா.மு. பழனியப்பன்
20. ,, மு. க. இராமசாமி
21. ,, பெரி. வீரசேகரன்
22. ,, பழ. வீர. வீரப்பன்
23. ,, வீ. சேதுராமன்
24. ,, பெ. மு. சொக்கலிங்கம்
25. ,, சாத்தப்பா சுப்பிரமணியம்
26. ,, வீ. வீரப்பன்
27. ,, வீர. சொ. வீரப்பன்
28. ,, அரு. நாச்சியப்பன்
29. ,, வீர. வீரப்பன்
30. ,, கதி. வீர. இராமநாதன்

## ஆண்டுக் கட்டண உறுப்பினர்கள்

1. திரு. சே. பழனியப்பன்
2. ,, சித. அரு வீரப்பன்
3. ,, இராம. முத்தப்பன்
4. ,, மெ. சிதம்பரம்
5. ,, சித. வயி. வயி. வயிரவன்
6. ,, பெ. அரு. பழ. இராம. அருணாசலம்
7. ,, வயி. வயிரவன், பி.இ.
8. ,, வீ. இராமசாமி
9. ,, பெரி. சினையாள்

10. திரு. சித. நல்லபெருமாள்
11. ,, வீர. வடுகநாதன்
12. ,, அ. அருணாசலம்
13. ,, வீர. கதிரேசன்
14. ,, அழகு. நாகப்பன்
15. ,, சா சித திருநாவுக்கரசு
16. ,, சோம. சுப்பிரமணியன்
17. ,, சுப. இராமநாதன்
18. ,, சுப. வேலப்பன்
19. ,, லெ. இராம. லெ. லெட்சுமணன்
20. ,, இராம. சிதம்பரம்
21. ,, பெரி. சிதம்பரம்
22. ,, பழ. முத்துப்பழனியப்பன்
23. ,, இராம. வினோதிர்த்நான்
24. ,, பழ. கோவிந்தன்
25. ,, என். வி. எஸ் காந்தி
26. ,, அழ. வயிரவன்
27. ,, பெரி. சுப்பிரமணியன்
28. ,, செ.வ. லெட்சுமணன்
29. ,, அழகு. வீரப்பன்
30. ,, இராம. விஸ்வநாதன்
31. ,, இராம லெட்சுமணன்
32. ,, அரு. கண்ணன்
33. ,, பெ. மு. வி. முத்தப்பன்
34. ,, பெ. மு. பெரியண்ணன்
35. ,, அ. செல்லப்பன்
36. ,, பெரி. நாராயணன்
37. ,, என். வி. எஸ். கண்ணன்
38. ,, என். வி. எஸ் மீனாட்சிசுந்தரம்
39. ,, என். வி. எஸ். இராமகிருஷ்ணன்
40. ,, இராம. நாராயணன்

14. திரு ஏ. வீரப்பன்
42. .. பெரி. சித. கண்ணன்
43 .. இராம. சொக்கலிங்கம்
44. .. நா பழனியப்பன்
45. .. வீர. மணிவாசகம்
46. .. சுப. ரா. சுப்பிரமணியன்
47. .. சுப. வீர. சுப்பிரமணியன்
48. .. அழகு. சுப்பிரமணியன்
49. .. இராம வீரப்பன்

## ஸ்ரீ சரசுவதி வித்யா சாலை நிர்வாகக்குழு

தலைவர்:- பெ. ப. வி. அரு. இராம, முத்தப்பன்

செயலர்:- பெ. பெரி. வீர. சோலையப்பன்

உறுப்பினர்கள்:-

திரு. மெ. சிதம்பரம்
திரு. சோ. சுப்பிரமணியன்
திரு. வீர.வீர. சோலையப்பன்
திரு. பெரி. சிதம்பரம்
திரு. மு. வினைதீர்த்தான் (நிரப்பப்பட வேண்டும்)
திரு. சித. ராம. சிதம்பரம்
திரு. இராம. சிதம்பரம்
திரு. அழ. வயிரவன்
திரு. ஸ்ரீ சீனிவாசன் (பள்ளித்தலைமை ஆசிரியர்)
திரு. சி. இராமன் (ஆசிரிய உறுப்பினர்)

# ஸ்ரீ சரசுவதி வித்யாசாலை பெண்கள் உயர்நிலைப்பள்ளி நிர்வாகக் குழு

தலைவர் :- யெ.மு.சொக்கலிங்கம்

செயலர் :- பெரி. சிதம்பரம்

உறுப்பினர்கள் :-

திரு. மெ. சிதம்பரம்
திரு. மு. வினைதீர்த்தான் (நிரப்பப்பட வேண்டும்.)
திரு. சோம. சுப்பிரமணியன்
திரு. பெ.ப.வி.அரு.ராம.முத்தப்பன்
திரு. மு.க. இராமசாமி
திரு. ப பெ.அரு.ராம.பழ.அருணாசலம்
திரு. யெ.பெரி.வீர,வீர.சோலையப்பன்
திரு. சித.வயி.சிதம்பரம்
திரு. பழ.முத்தப்பன்
திரு. பெரி.நாராயணன்
திரு. என்.வி.எஸ். காந்தி
திரு. இராம. இராம்நாதன்
திருமதி. லீலாசங்கர் (தலைமை ஆசிரியை)

# ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை ஆசிரியர்கள்

1. திரு ஸ்ரீ ராம ஸ்ரீநிவாசன் — தலைமையாசிரியர்
2. திரு. C இராமன் — உதவியாசிரியர்
3. திருமதி K. துளசிமணி — ,,
4. திருமதி V.R. ரேவதி — ,,
5. திருமதி H. வசந்தா — ,,

# சத்துணவுப் பணியாளர்கள்

1. A.R. சீதாலெட்சுமி — அமைப்பாளர்
2. சு. ராஜம்மாள் } உதவியாளர்கள்
3. R. ஜோதி } உதவியாளர்கள்

# பொதுக்குழு கூட்டம் தீர்மானம்

## ஸ்ரீ சரசுவதி சங்கம், புதுவயல். 2.2.92, கூட்டத் தீர்மான நகல்

நம் சங்கத்தின் உறுப்பினர்களின் பொதுக்குழுக் கூட்டம், இன்று பிற்பகல் 3 மணி அளவில் கலைமகளின் வழிபாட்டோடு தொடங்கிற்று. கூட்டத்திற்குச் சங்க மூத்த உறுப்பினர் உயர்திரு. மு. வினைதீர்த்தான் செட்டியார் அவர்கள் தலைமை ஏற்றார்கள். அதுபோழ்து கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

1. ஸ்ரீ சரசுவதி சங்கத்தின் தலைவராக இருந்து மறைந்த பெரி. சித. இராமசாமி செட்டியார் அவர்களுக்குப் பதிலாக—உயர்திரு சித.ராம.சிதம்பரம். பி.இ அவர்களைச் சங்கத் தலைவராக திரு.வீர.வீர. சோலையப்பன் அவர்கள் முன் மொழிய, திரு எஸ் காந்தி அவர்கள் வழிமொழிய, ஏகமானதாகத் தீர்மானிக்கப் பெற்றது.

2. வித்தியாசாலையின் மணிவிழாவை எப்ரல்/மே மாதத்தில் ஒரு நாள் விழாவாகக் கொண்டாடுவது என்றும், மாண்புமிகு கல்வி அமைச்சரையோ—சூழலுக்கேற்பச் சங்கத் தலைவர், செயலர் இருவரும் அமைத்திடுவது என்றும் தீர்மானிக்கப் பெற்றது. ,

3. வித்தியாசாலை—உயர்நிலைப் பள்ளி நிர்வாகங்களைத் தற்பொழுது இருப்பது போலவே தனித்தனியாகத் தொடர்ந்து நீடிப்பது என்றும் தீர்மானிக்கப் பெற்றது.

4. வித்தியாசாலை புதிய கட்டிடம் பற்றி அடுத்த கூட்டத்திற் பேசுவது என்றுந் தீர்மானிக்கப் பெற்றது.

5. வித்தியாசாலை நிர்வாகக் குழுத்தலைவராக இருந்துவந்த பெரி.சித.இராமசாமி செட்டியார் அவர்கள் மறைவு காரணத்-தால் நிர்வாகக் குழுத் தலைவராக உயர்திரு. பெ.ப.வி.அரு. ராம. முத்தப்பன் அவர்களை — உயர்திரு, பெரி.சிதம்பரம் அவர்கள் முன்மொழிய, உயர்திரு.பழ.முத்தப்பன் அவர்கள் வழிமொழிய ஏகமனதாகத் தீர்மானிக்கப் பெற்றது· பெ.ப.வி. ராம.முத்தப்பன் அவர்கள் உறுப்பினர் இடத்திற்கு உயர்திரு. சித.இராம.சிதம்பரம் அவர்களை யெ.பெரி.வீர. சோலையப்ப செட்டியார் அவர்கள் முன்மொழிய, உயர்திரு.பிஆர். நாராயணன் அவர்கள் வழிமொழிய ஏகமனதாகத் தேர்ந்-தெடுக்கப் பெற்றது.

மேலும் வித்தியாசாலை நிர்வாகக் குழுவிற்குப் புதிய உறுப்பினர்களாகக் கீழ்க்கண்டவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். திரு 1. இராம.சிதம்பரம். 2. அழ. வயிரவன் முன் மொழிந்தவர்கள்: உயர்திரு. வீர.வீர.சோலையப்பன், என். கண்ணன். வழி மொழிந்தவர்கள்: உயர்திரு, வி. பழநியப்பன், சோ.வீரப்பன்.

6. உயர்பள்ளி நிர்வாகக் குழுவிற்கு பெரி.வீர.ராம.பெரியணன் செட்டியார், வே. நாராயணன் (சோமையா). பெரி.சித.இராமசாமி செட்டியார் ஆகியோர் மறைவால் ஏற்பட்ட காலி இடங்களுக்குக் கீழ்க்கண்டவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

1. திரு.பெரி.நாராயணன், திரு. என்.வி.என்.காந்தி, திரு. இராம.ராமநாதன்

முன்மொழிந்தவர்கள்: 1.திரு.ராம.முத்தப்பன், திரு.ராம.சிதம்பரம், திரு. சோம.சுப்பிரமணியன்.

வழிமொழிந்தவர்கள்: திரு.பழ. முத்தப்பன், திரு. வீர. வீர. சோலையப்பன் திரு.பிஆர்.சிதம்பரம்

## இதர தீர்மானங்கள்

1. இனிவரும் ஆண்டுவிழாக்களில் கல்வி நிறுவனங்களில் விழாக்களைச் சங்க விழாவோடு சேர்த்து நடத்துவது என்றும் தீர்மானிக்கப் பெற்றது.

2. உயர்பள்ளிக்கு விளையாட்டு இடத்திற்கு வாங்கப் பெற்ற உயர்பள்ளிக்குத் தென்புறம் உள்ள விளையாட்டு இடத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள தங்களுக்குச் சொந்தமான—தோட்டப் பகுதியை (பள்ளியின் தெற்குச் சுவரின் நேர் கோட்டிற்குள் அமைந்த பகுதியை) திரு.என்.வி.எஸ். காந்தி அவர்களும் அவர்கள் சகோதரர்களும் நன்கொடையாகத் தந்ததை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு நன்றியும் தெரிவிக்கப் பெற்றது.

## 69 ஆம் ஆண்டு விழா

ஸ்ரீ சரசுவதி சங்கத்தின் 69 ஆண்டு நிறைவு விழாவும், ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை 59 ஆம் ஆண்டு விழாவும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தில் பிரஜோத்பத்தி ஆண்டு சித்திரைத்திங்கள் 18 ஆம் நாள் (1.5.91) புதன்கிழமை மாலை இருவேளைகளிலும் நடைபெற்றன.

வழக்கம்போல் புதுவயல் நகரமெங்கும் விழாவினை அறிவிக்கும் விளம்பரத் தாள்கள் ஒட்டப் பெற்றன. உயர்பள்ளியில் கொட்டகை போடப் பெற்று விழாவரங்கம் சிறப்பாக அமைக்கப் பெற்றது.

காலை உரையரங்கம்—திருமதி உமையாள் உடையப்பன் நினைவரங்கமாகப் பொலிவு பெற்றது. உரையரங்கத்திற்கு, காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி முதல்வர் உயர்திரு தெ.முருகசாமி அவர்கள் தலைமையேற்றார்கள் சமுதாய ஒருமைப் பாட்டில் என்ற பொதுத் தலைப்பில் இளங்கோ பற்றி செல்வன். மு. பழனியப்பன் பி.லிட் அவர்களும் கம்பன் பற்றி கரு முத்தையா அவர்களும், சேக்கிழார் பற்றி பேரா தா மணி அவர்களும் கண்ணதாசன் பற்றி சு போசு அவர்களும், உரை வழங்கினார்கள். இறுதியில் உரையரங்கத் தலைவர் அவர்கள் சமுதாய ஒருமைப்பாடு பற்றியும், அதற்கு புலவர் பெருமக்கள் வரையறுத்த இலக்கிய உணர்வுகளையும் மிகச்சிறப்பாகத் தொகுத்துரைத்தார்கள். விழாவின் தொடக்கத்தில் ஆசிரியர் இராம. பழனியப்பன் கலைமகள் வணக்கம் பாடிடச் செயலர் பழ முத்தப்பன் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

பிற்பகல் கலைநிகழ்ச்சியாக விழா நடைபெற்றது விழாவிற்கு சாக்கோட்டை வட்டார உதவிக்கல்வி அலுவலர் உயர்திரு எம். முத்துப்பாக்கியம் எம் ஏ எம்.எட். அவர்கள் தலைமையேற்றார்கள். தொடக்கப்பள்ளி மாணவ மாணவியர் தொடக்கத்தில் இறைவணக்கம் பாடிடச் செயலர் பழ.முத்தப்பன் வரவேற்புரை நிகழ்த்திட செல்வன் மு. பழனியப்பன் அறிக்கை படித்திட, பின்னர் விழாத் தலைவர் முன்னுரை நிகழ்த்தினார்கள் போட்டிகளுக்குரிய பரிசுகளைப் பள்ளித் துணை ஆய்வாளர் உயர்திரு அ கனகராசன் எம்.எ எம்.எட் அவர்கள் மாணவ மாணவிகளுக்கு வழங்கினார்கள். பின்னர் இளம் பள்ளித்துணை ஆய்வாளர் உயர்திரு ஆர். பொன்னுராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள் அதனை அடுத்து மாணவ மாணவியர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதியில் செயலர் நன்றிகூற இரவு 8 மணிக்கு விழா நிறைவு பெற்றது.

# ஆங்கிரஸ ஆண்டு முதல்
# ஆயுள் சந்தா

## உறுப்பினர் பட்டியலில்

## கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் இணைக்கப் பெறுகிறார்கள்

1. அரு. ராமசாமி
2. அரு. பழனியப்பன்
3. பழ. கோவிந்தன்
4. சித. திருநாவுக்கரசு
5. சித. வயி. வயி. வயிரவன்
6. வீர. சுந்தரேசன்
7. இராம. சிதம்பரம்
8. வயி. வயிரவன் B.E
9. முரு நாராயணன்
10. முரு. சிதம்பரம்

## "விழாக்கள்" நன்கொடையாளர்கள்

1. தமிழ்ப்புத்தாண்டு—வித்தியாசாலை

2. கலைமகள் விழா : 1. பெ. பெரி. வீர. பழ.
குடும்பத்தார்
2. வீர. பழ. பழனியப்பன்
3. சோம. சுப்பிரமணியன்
4. பெ. பெரி. வீர.
சோலையப்பன்
5. பெரி. சித. இராம குடும்பத்தார்
6. பெரி. அழகப்பன்
7. சா. சித. திருநாவுக்கரசு
8. கதி. வீர. கதிரேசன்
9 சே. பழனியப்பன்
10 கா. அரு குடும்பத்தார்

3. (விநாயகர் சதுர்த்தி விழா. அன்பர்கள் கூட்டம் கலந்து கொள்ளும் நிலை குறைந்ததால் அவ்விழாவிற்குரிய நன்கொடையாளர்கள், இந்த ஆண்டு (ஆங்கிரஸ) முதல் கலைமகள் விழாவில் நன்கொடையாளராக இணைக்கப்படுகிறார்கள்.)

11 சு. இராம. வீர. இராமசாமி
12. மெ. சிதம்பரம்

ஆங்கிரஸ ஆண்டுமுதல்
புதிய நன்கொடையாளர்
13. வீர வீர சோலையப்பன்

## பரிசுகள் விபரம்

| எண் | வகுப்பு | பரிசு | நன்கொடையாளர்கள் | வைப்புத் தொகை | வங்கி |
|---|---|---|---|---|---|
| 1) | முதல் | ஆத்திசூடி | வி. இராமசாமி | 100-00 | பாங்க் ஆப் பரோடா |
| 2) | இரண்டு | கொடைவிளக்கு | மு.பெரி.சின்னக்கருப்பன் | 100-00 | பாங்க் ஆப் பரோடா |
| 3) | 3,4,5,6,7 வகுப்புகள் | திருக்குறள் | சேவு. அ. அண | 500-00 | பாங்க் ஆப் பரோடா |
| | | | அண்ண மலை | 305-00 | பாங்க் ஆப் பரோடா |
| 4) | 3,4,5 | தேவாரம் | சுப.நா.நினைவு நா.சுப்பிரமணியன் | 200-00 | பாங்க் ஆப் பரோடா |
| 5) | எட்டு | திருவாசகம் | டாக்டர் வீர-இராமநாதன் | 100-00 | இந்தியன் வங்கி |
| 6) | ஒன்பது | சிலப்பதிகாரம் | சித.ராம.சிதம்பரம் | — | — |
| 7) | பத்து | கம்பராமாயணம் | க வீ.அள மு.ராமசாமி | 301-00 | பாங்க் ஆப் பரோடா |
| 8) | ஒன்றுமுதல்ஐந்து | வகுப்புத் தேர்ச்சி | யெ.பெரி வீர.வீர.நினைவு வீர.வீர சோலையப்பன் | 500-00 | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி |
| 9) | மூன்றுமுதல்ஐந்து | தமிழ்முதன்மை வெள்ளி மெடல் | சுப.பழ.நினைவு,சோம. சுப்பிரமணியன் | நேரில் | |
| 10) | ஆறு முதல் எட்டு | தமிழ் முதன்மை வெள்ளி மெடல் | டாக்டர் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் | 900-00 | பாங்க் ஆப் பரோடா |

| எண் | வகுப்பு | பரிசு | நன்கொடையாளர்கள் | வைப்புத் தொகை | வங்கி |
|---|---|---|---|---|---|
| 11) | மூன்றுமுதல்ஐந்து | ஆங்கிலம் | வி பழனியப்பன் | 200-00 | பாங்க் ஆப் பரோடா |
| 12) | ஆறுமுதல்ஒன்பது | வகுப்புத் தேர்ச்சி | சபரி.சுப்பையா | 1000-00 | பாங்க் ஆப் பரோடா |
| 13) | ஆண்டு விழா | நடிப்பு | பி.சண்முகசுந்தரம் | 251-00 | பாங்க் ஆப் பரோடா |
| 14) | பத்தாம் வகுப்பு | தமிழ்முதன்மை | சொ.வீரப்பன் | 1000-00 | தனி முதலீடு |
| 15) | ,, | மொத்த மதிப்பெண் முதன்மை | உமையாள் இராமநாதன் | 1000-00 | தனி முதலீடு |
| 16) | ,, | விஞ்ஞானம் | சாத்தப்பா சுப்பிரமணியன் | 500-00 | பாங்க் ஆப் பரோடா |
| 17) | ,, | கணிதம் | ,, | 500 | ,, |
| 18) | ,, | ஆங்கிலம் | ,, | 500 | ,, |
| 19) | ,, | புவியியல் | வேணி சவுண்ட் சர்வீஸ் | — | — |
| 20) | ஒன்றுமுதல்ஐந்து | இலவச புத்தகம் | சீ.வீர.சி.அறப்பணி | 1000 | இந்தியன் ஓவர்சீஸ் |
| 21) | ,, | இலவச புத்தகம் | பழ.ரெங்கநாதன் | 500 | பாங்க் ஆப் பரோடா |
| 22) | ,, | விளையாட்டு | பழ.ஏகப்பன்<br>சித்.ராம.இராமநாதன் | — | — |

உ.

சிவமயம்

# ஆண்டு விழாக்களில் தலைமை தாங்கியவர்கள்

1ஆம் ஆண்டு திரு. எ.வி. சேஷகிரி சாஸ்திரி அவர்கள் கண்டனூர்

2 .. .. .. அரு.சித. இராமநாதன் செட்டியார் அவர்கள் கண்டனூர்

3 .. .. .. சொ. முருகப்பா அவர்கள் குமரன் ஆசிரியர், அமராவதி புதூர்

4 .. .. .. பிச்சப்பா சுப்பிரமணியன் அவர்கள் காரைக்குடி

5 .. .. .. சா.லெ. செட்டியப்ப செட்டியார் அவர்கள் காரைக்குடி

6 .. .. .. டி கோமதி நாயகம் பிள்ளை அவர்கள் B,A,BL. தேவகோட்டை

7 .. .. .. பி.வி. சங்கரகாமேஸ்வர ஐயர் அவர்கள் B.A. புதுக்கோட்டை

8 .. .. .. பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை அவர்கள் M.A.BL. திருநெல்வேலி

9 .. .. .. ஆர்.பி. சேதுப்பிள்ளை அவர்கள் B A BL. திருச்சி

10 .. .. .. டி.எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் M.A BL. திருச்சி

11 .. .. .. எஸ். சோமசுந்தர பாரதி அவர்கள் M.A.BL. மதுரை

12 .. .. .. த.வே. உமாமகேஸ்வரம் பிள்ளை அவர்கள் B A.BL. தஞ்சை

13 .. .. .. தேசபக்தர் வ உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தூத்துக்குடி

14 .. .. .. டி.கே. சிதம்பரநாத முதலியார், அவர்கள் B.A.BL. திருநெல்வேலி

15 .. .. .. வி.கலியாண சுந்தர முதலியார் அவர்கள் 'நவ சக்தி' ஆசிரியர் சென்னை

16ஆம் ஆண்டு திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்
B A L T.D E.O கடலூர்

17 ,, ,, ,, கவிராஜ பண்டிதர் ஜெகவீரபாண்டியனார்
அவர்கள் தூத்துக்குடி.

18 ,, ,, ,, கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்
எம்.ஏ எம் எல். திருநெல்வேலி

19 ,, ,, ,, அ. சீனிவாச ராகவன் அவர்கள் எம்.ஏ.
திருநெல்வேலி

20 ,, ,, ,, சுவாமி சித்பவானந்தா அவர்கள்
திருப்பராய்த்துறை

21 ,, ,, ,, கு. மதுரை முதலியார் அவர்கள் ராயவரம்

22 ,, ,, ,, ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள்
பி.ஏ பி.எல். சென்னை

23 ,, ,, ,, D சாம்பசிவம் பிள்ளை அவர்கள்
பி ஏ பி.எல்.டி.இ.ஓ. ராம்நாட் D.

24 ,, ,, ,, தேசபக்தர் சா. கணேசன் அவர்கள் காரைக்குடி

25 ,, வெள்ளிவிழா டாக்டர். கே எஸ் கிருஷ்ணன் அவர்கள்
Kt.D.Sc.F.R.S.

26 ,, ,, ,, தமிழ்க்கடல். ராய. சொக்கலிங்கம் அவர்கள்
காரைக்குடி

27 ,, ,, ,, பாலகவி வயிநாகரம்.வே.இராமநாதன் செட்டி-
யார் தேவகோட்டை.

28 ,, ,, ,, கி ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் திருச்சி

29 ,, ,, ,, குன்றக்குடி திருப்பெருந்திரு. தெய்வசிகாமணி
அருணாசல தேசிக சுவாமிகள்

30 ,, ,, ,, புரசுவாமிநாதன் அவர்கள். எம். ஏ. எல். டி.
அண்ணாமலை நகர்.

31 ,, ,, ,, சேவு அ.அண்ணாமலை செட்டியார் அவர்கள்
பி.காம் தேவகோட்டை

32 ,, ,, ,, க.வி.அழ.மு. இராமநாதன் செட்டியார் அவர்கள்
கோட்டையூர்

33 ,, ,, ,, தி. சு. பழ. ப. சித. சுப்பிரமணியன் செட்டியார்
அவர்கள் தேவகோட்டை

34 ,, ,, ,, P.A. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள்
தேவகோட்டை

# சங்கத்தின் 35ஆம் ஆண்டு வித்தியா சாலையின் 25 ஆம் ஆண்டு (வெள்ளி விழா)

முதல் நாள் : திரு. நா. சுப்பு ரெட்டியார் எம்.ஏ பி.எஸ்ஸி. எல்.டி அவர்கள்

இரண்டாம் நாள் : திரு. கருமுத்து தி மாணிக்க வாசகம் செட்டியார் அவர்கள் மதுரை

36ஆம் ஆண்டு திரு. அரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் காரைக்குடி

37 ,, ,, ,, பி துரைக்கண்ணு முதலியார் எம்.ஏ.எல்.டி. அவர்கள்

38 ,, ,, ,, C. சுப்பிரமணியம் பி.ஏ.பி டி. அவர்கள் புதுக்கோட்டை

39 ,, ,, ,, ஆர். சீனிவாசராகவன்பி.ஏ.பி.ஏ பி.டி.அவர்கள்

40 ,, ,, ,, R. நாட்டராயன் பி.ஏ.எல்.டி. அவர்கள் (முதல் நாள்)

திரு. V.S. சுப்பையா ஐ.ஏ.எஸ். (தமிழக அரசு விவசாயத் துறைத்துணைச் செயலாளர்)

41 ,, ,, ,, கோ வன்மீக நாதன் அவர்கள் திருச்சி

42 ,, ,, ,, பழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் மேலைச் சிவபுரி

43 ,, ,, ,, எம். இராமச்சந்திரன் பி.ஏ பி டி. அவர்கள் காரைக்குடி

44 ,, ,, ,, W மாணிக்கம் பி.ஏ.பி.டி.அவர்கள் காரைக்குடி

45 ,, ,, ,, வித்துவான் பூ. அமிர்தலிங்கம் பி.ஏ. காரைக்குடி

46 ,, ,, ,, சௌ. தோதாத்திரி. எம்.ஏ பி.எஸ்ஸி. பி.டி. பள்ளத்தூர்

47 ,, ,, ,, கவிஞர். அரு சோமசுந்தரம் பி.ஏ.பி டி. காரைக்குடி

48 ,, ,, ,, வயி. ராம. கி. இராமசாமி செட்டியார் பி.ஏ. அரியக்குடி

49 ,, ,, ,, சித சிதம்பரம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் காரைக்குடி

50வது பொன்விழா டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதி,
திரு. கி வா. ஜகந்நாதன்
திரு. தி. மாணிக்கவாசகம்

51ஆம் ஆண்டு திரு. புலவர். இரா. செல்வக்கணபதி எம்.ஏ. அவர்கள் தருமபுரம்

52 ,, ,, ,, பேராசிரியர் வே. சிவசுப்பிரமணியன் அவர்கள் மயிலம்

53 ,, ,, ,, பெரி. சித. இராமசாமி செட்டியார் அவர்கள்

54 ,, ,, ,, பேராசிரியர், இரா. இராதாகிருஷ்ணன் அவர்கள் திருச்சி

55 ,, ,, ,, பேராசிரியர். ஆ. சிவலிங்கனார் அவர்கள் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை

56 ,, ,, ,, இராம. குப்பான் செட்டியார் அவர்கள் தலைமை ஆசிரியர் கண்டனூர்

57 ,, ,, ,, குழந்தைக் கவிஞர். அழ. வள்ளியப்பா அவர்கள் காரைக்குடி.

58 ,, ,, ,, பேராசிரியர். டாக்டர். வெ.சு. அழகப்பன் எம்,ஓ.எல். பி.எச்.டி. அவர்கள் காரைக்குடி

59 ,, ,, ,, பாலயோகி இராமதாஸ் சுவாமிகள் அவர்கள் மேலமங்கலம் தென்ஆற்காடு மாவட்டம்

60 ,, ,, ,, மணிவிழா – முப்பெரும் விழா

முதல்நாள்:- திரு. ராஜா. சர். முத்தையா செட்டியார் அவர்கள்

இரண்டாம்நாள்:- திரு. சேவு அண.அண்ணாமலை செட்டியார் அவர்கள்

மூன்றாம்நாள்:– திரு. டாக்டர்—தமிழண்ணல் அவர்கள்

நான்காம்நாள்:- திரு. பா. நமச்சிவாயம். அவர்கள்

61 ,, ஆண்டு திருமதி சரசுவதி இராமநாதன் அவர்கள்

62 ,, ஆண்டு திரு. பேராசிரியர். அ. மங்கல முடையார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகம். சிதம்பரம்

63 ,, ,, ,, முரு.பழ ரத்தினம் செட்டியார் அவர்கள்

64 ,, ஆண்டு தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள்

65 ,, ,, ,, பா. நமச்சிவாயம் அவர்கள்

66 ,, ,, ,, பேராசிரியர் மனம் சேர சந்திரகாசன் அவர்கள்

67 ,, ,, ,, டாக்டர் வி. ஆர். ராமநாதன் அவர்கள்

68 ,, ,, ,, ஆ. திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள்

69 ,, ,, ,, தெ.முருகசாமி அவர்கள்

# 1982 முதல் ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலை தொடக்கப்பள்ளிக்கு நன்கொடை வழங்கிய பெருமக்கள்

1. திரு வீர.வீர.சோலையப்பன் அவர்கள்—ஸ்டீல் பீரோ

2. திரு.யெ.பெரி.வீர.பழ.ஏகப்பன் அவர்கள் - யெ.பெரி.வீர.பழ. லெட்சுமி ஆச்சி அவர்கள் நினைவாக ஸ்டீல் பீரோ

3. இராமனாதன் செட்டியார் சாரட்டி டிரஸ்ட்—சித, கற்பகம் அவர்கள் (ஸ்டீல் பீரோ, குடிநீர்த் தொட்டி, மின் இணைப்பு, அறிவியல் உபகரணங்கள், நாற்காலிகள்)

4. டாக்டர் VR. இராமனாதன் அவர்கள்-அறிவியல் உபகரணங்கள்

5. திரு. ப.பெ. அரு. ராம பழ ராம. அருணாசலம் செட்டியார் அவர்கள் பழநியப்ப செட்டியார் நினைவு அறப்பணி (மின்விசிறி தண்ணீர் டிரம்)

6. திரு.யெ. பெரி. வீர. பழ ரெங்கநாதன் அவர்கள் — நகரத்தார் குழந்தைகளுக்கு இலவசப்புத்தகங்கள்

7. திரு.AR. நாச்சியப்பன்—அருண்வாட்ச் ஹவுஸ்—கவர்க்கடிகாரம்

8. கணேஷ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் சர்வீஸ் சென்னை-20, M/S மதன்&கோ-சென்னை-1 } திரு. பழ ராம, வினைதீர்த்தான் அவர்கள் மூலம்
600 நோட்டுப்புத்தகங்கள்—1குயர் 60 சிலேட்டுகள்

9. ஸ்ரீ சரசுவதி சங்கத்தார். சங்கச் செயலர் திரு.பழ. முத்தப்பன் அவர்கள் மூலம் — சத்துணவு சமைக்க ரூ 500/க்கு பாத்திரங்கள்

10. திரு. V. வீரப்பன் அவர்கள்—இலவச சிலேட்

# விழாக்களில் பங்கேற்ற அறிஞர் பெருமக்கள்

1. மகாகவி பாரதியார்
2. ஈ.வெ.ரா.பெரியார்
3. பண்டிதமணி. மு கதிரேசன் செட்டியார்
4. ப ஜீவானந்தம்
5. கல்வி. இரா. கிருஷ்ணமூர்த்தி
6. டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார்
7. டாக்டர் மு. வரதராசனார்
8. மறை. திருநாவுக்கரசு
9. டாக்டர்.வ.சு.ப. மாணிக்கம்
10. தி.ஐயன் பெருமாள் கோனார்
11. நாமக்கல் கவிஞர். வெ. இராமலிங்கம்பிள்ளை
12. சித்தாந்த வித்தகர் மு.பழ.இரத்தினஞ் செட்டியார்
13 பெரும்புலவர் அ. நடேசமுதலியார்
14. பெரும்புலவர். அ.மு.சரவண முதலியார்
15. சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம்
16. டாக்டர். மெ. சுந்தரம்
17. டாக்டர். தமிழண்ணல்
18. டாக்டர். சுப. அண்ணமலை
19. அ.ச. ஞானசம்பந்தன்
20. நெல்லை. கரு. சிங்காரம்
21. தவத்திரு. குன்றக்குடி அடிகளார்
22. CT. CT. வெங்கடாசலம் செட்டியார்
23. AN. சிவராமன் 'தினமணி' ஆசிரியர்
24. அரு. இராமனாதன் காதல்' ஆசிரியர்.
25. மெ சிதம்பரம் ஆசிரியர் ''த்மிழ்முரசு'' சிங்கப்பூர்
26. T. செங்கல்வராயன் மதுரை
27. சேவு. மெ. மெய்யப்ப செட்டியார்
28. புலவர். மெ. திருநாவுக்கரசு மலேயா

29 பொன். குமாரசாமி அடிகளார் காஞ்சி
30. ஸ்ரீலஸ்ரீ காஞ்சி காமகோடி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
31. டாக்டர் சி. வேங்கட சுப்ரமணியம்
32. பாங்க் ஆப் மதுரை சேர்மன் திரு. இராம. முத்தையா
33. திரு. லேனா. தமிழ்வாணன்
34. டாக்டர் திரு. நா. கடிகாசலம் சென்னை
35. இராம. பெரியகருப்பன் செட்டியார்
36. திரு. அ. அறிவொளி
37. திரு. தெ. ஞானசுந்தரம்
38. கவிஞர். மீனவன்
39. கவிஞர். ஜவஹர்லால்
40. மக்கள் கவிஞர் அரு. நாகப்பன்
41. புலவர் மாமணி. மா. முத்துராமன்
42. திரு. சுபாஷ் சந்திர போசு
43. திருமதி. உமையாள் முத்து
44. டாக்டர். மு சிவசந்திரன்
45 திரு. தி.சு. மலையப்பன்
46. டாக்டர். தி. ராஜகோபாலன்
47. திரு. த. ராஜாராம்
48. திரு. சொ. சொ. மீ சுந்தரம்
49.

# பொன்விழாவில் பூத்த பெண்கள் உயர்பள்ளி

நம் சங்கத்தின் 8.10.81 பொதுக்குழுக் கூட்டத்தில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி தோற்றுவிக்கக் கால்கோள் இடப் பெற்றது. அக்கூட்டத்தில் உயர் பள்ளிக்குச் செயற்குழு தேர்ந்தெடுக்கப் பெற்றது. செயற்குழுவின் முயற்சியால் அரசு ஆணை R.C 9877/G 3/82 என்பதன்படி 1.7.82ல் பெண்கள் உயர்பள்ளி ஆரம்பிக்கப் பெற்றது.

உயர்பள்ளிக்கு வைப்பு நிதியாகக் கட்டவேண்டிய ஒருஇலட்சம் ருபாயைச் சங்க உறுப்பினர்களாகிய திரு.யெ மு சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள், திரு மு க இராமசாமி செட்டியார் அவர்கள் திரு ப பெ.அரு ராம பழ.அருணாசலம் செட்டியார் அவர்கள், திரு. பெரி சித.இராமசாமி செட்டியார் அவர்கள், திரு.பெ.ப.வி.அரு. ராம முத்தப்பன் அவர்கள் ஆகிய வள்ளற் பெருமக்கள் பகிர்ந்து நன்கொடை அளித்து வைப்பு நிதியை உருவாக்கித் தந்துள்ளார்கள்.

8 10 81 பொதுக்குழுக் கூட்டத்தில் எற்றுக் கொண்ட தீர்-மானத்தின்படி வித்தியாசாலைக் கட்டிடத்தில் உயர்பள்ளி நடை பெற்று வருவதால்-வித்தியாசாலை-உயர்திரு யெ.மு.சொக்கலிங்கம் செட்டியார் அவர்கட்குச் சொந்தமான நடுவீதியில் உள்ள கட்டிடத்-தில் வாடகைக்கு நடைபெற்று வருகிறது அவ்வாடகை ருபாயும் சொக்கலிங்கம் சரோஜா ஆச்சி டிரஸ்ட் வித்தியாசாலைக்கு நன் கொடையாக அளிக்க–வித்தியாசாலை அவ்வாடகையைச் செலுத்தி வருகிறது

பெண்கள் உயர்பள்ளி விளையாட்டு இடத்திற்குப் பள்ளியின் எதிரே உள்ள இடத்தைச் சங்க உறுப்பினர் உயர்திரு யெ பெரி. வீர.வீர. சோலையப்பன் அவர்கள் 'நன்கொடை'யாக அளித்துள்-ளார்கள். பள்ளியின் இடதுபுறமுள்ள விளையாட்டு இடம் ஒரு லட்சம் வைப்புநிதி அளித்த வள்ளல் பெருமக்களோடு உயர்திரு சாத்தப்பா சுப்பிரமணியம், உயர்திரு. ப. சிதம்பரம் ஆகிய இருவரும் சேர்ந்து-பொருளுதவி செய்து விலைக்கு வாங்கிப் பள்ளிக்கு உடைமை யாக்கித் தந்துள்ளார்கள். மேலும் விலைக்கு வாங்கப் பெற்ற இடத் திற்குக் கிழக்குப் பகுதியில் உள்ள தங்கட்குச் சொந்தமான தோட்டப் பகுதியை 2 2.92ல் நடைபெற்ற சங்கப் பொதுக்குழுக் கூட்டத்தில் திரு.என்.வி.எஸ்.காந்தி அவர்களும், அவர்கள் சகோதரர்களும் நன்கொடையாக அளித்துள்ளார்கள்.

32

கடந்த பத்தாண்டு காலமாக உயர் பள்ளி சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது. பள்ளியின் வளர்ச்சி பற்றி அதன் தலைமை ஆசிரியை திருமதி எம்.எஸ்.லீலாசங்கர் அவர்கள் அளித்துள்ள அறிக்கை பின்வருமாறு :

★ இவ்வாண்டு பயிலும் மாணவியரில் தகுதியுள்ளவர்களுக்கு இலவசப் புத்தகம் நோட்டுகள் வழங்க ரூ 200/- திரு.ப.செ.பழ வீரப்ப செட்டியார் அவர்கள் நன்கொடை அளித்துள்ளார்கள்.

## பள்ளி முன்னேற்றம்

மார்ச் 84, 89, 90 ஆகிய ஆண்டுகளில் பள்ளியிறுதிப் பொதுத் தேர்வில் மாணவியர் 100% தேர்ச்சி பெற்றுள்ளனர். இவ் வெற்றிகட்காகத் தங்க மனம் கொண்ட சரசுவதி சங்கத்தாராலும் பள்ளி நிர்வாகக் குழுத் தலைவர் திரு. யெ மு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களாலும் பரிசளித்துப் பாராட்டப்பட்டோம். காரைக்குடி ரோட்டரி கிளப், அரிமா சங்கம், இன்னர்வில் கிளப் ஆகிய நிறுவனங்களால் 100ரூ பணம், கேடயம், சுழற்கோப்பை ஆகியன வழங்கப்பட்டன. கல்வி அமைச்சரிடமிருந்தும் பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்தும் நற்சான்றிதழ்கள் பெறப்பட்டன.

மார்ச்சு 90-ல் நடைபெற்ற தேர்வில் கணிதம், வரலாறு ஆகிய பாடங்களுக்காக உயர் சராசரி மதிப்பெண் மாவட்ட அளவில் பெற்றமைக்காகச் சுழற்கோப்பை கிடைத்தது. C E.C.R E-யில் இருந்து அறிவியல், கணிதம் ஆகிய பாடங்களில் 100% தேர்ச்சிக்-காகத் தலைமை ஆசிரியை அவர்கட்கும் கணித ஆசிரியை இராம. சிவகாம சுந்தரி அவர்கட்கும் பாராட்டிதழ்கள் கிடைத்தன.

மார்ச்சு 86-ல் 95% தேர்ச்சி மார்ச் 86-ல் 92% தேர்ச்சி அறிவியலில் மாவட்ட அளவில் உயர் சராசரி மதிப்பெண் பெற்ற-மைக்காகப் பள்ளி நிர்வாகக்குழுத் தலைவர் திரு.யெ மு. சொக்க-லிங்கம் செட்டியார் அவர்களால் தம் மகன் முத்தப்பன் நினைவு சுழற்கோப்பை வழங்கப்பட்டது.

மார்ச்சு 87-ல் 83% தேர்ச்சி பின் மார்ச்சு 88-ல் 90% தேர்ச்சி எப்ரல் 91-ல் 95% தேர்ச்சி எப்ரல் 98% தேர்ச்சி. ஆண்டு தோறும் 100% தேர்ச்சி எனும் வெற்றிக்கனியைக் கடிதின் முயன்று பெறுவதே எம் நோக்கம்.

## இலக்கிய மன்றம்

இலக்கிய மன்றத்தின் சார்பில் குடியரசுநாள், உரிமைத் திருநாள், குழந்தைகள் தினவிழா, பாரதியார் விழா, எழுத்தறிவு வாரம், சத்துணவு வாரம் முதலிய தேசிய விழாக்கள் நடைபெற்று வருகின்றன.

87-ல் கம்பன் கழக கம்பராமாயணம் ஒப்புவித்தல் போட்டியில் 2-வது இடம் பெற்றுப் பாராட்டிதழும் ரு 75 ரொக்கப் பரிசும் கிடைத்தது. 88-லும் 89-லும் இரு மாணவியர் முறையே 3-ஆம் இடம் பெற்று பாராட்டிதழும் ரொக்கப் பரிசும் பெற்றனர் யூக்கோ வங்கி நடத்திய பேச்சுப் போட்டியில் 2-ஆம் இடம் கிடைத்து ஒரு மாணவி பரிசு பெற்றாள்.

இலக்கிய மன்றத்தின் சார்பில் நேரு நூற்றாண்டு விழா; கா.சு பிள்ளை நூற்றாண்டு விழா ஆகியன கொண்டாடப்பட்டன. பாரதியார் நினைவுப் பேச்சுப் போட்டியில் ஒரு மாணவி ஆறுதல் பரிசு பெற்றாள். இலக்கியம் ஒப்புவித்தல் போட்டிகள் ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்றன.

91-ல் கண்ணதாசன் பாடல் பாடி ஒரு மாணவி 3-ஆம் இடம் பெற்றுள்ளார். முத்துராமலிங்கத்தேவர் பேச்சுப் போட்டியிலும் இந்தியன் வங்கி நடத்திய பேச்சுப் போட்டியிலும் காரைக்குடி S.M.S. மேனிலைப் பள்ளியில் நடத்திய பேச்சுப் போட்டியிலும் மாணவியர் கலந்து கொண்டனர்.

## நிர்வாகத்தினரின் உதவி

கடந்த 4 ஆண்டுகளாக நிர்வாகத்தினரால் பட்டதாரி ஆசிரியை ஒருவரும் இடைநிலை ஆசிரியை இருவரும் நியமனம் செய்யப்பட்டுக் கல்வி மேம்பாட்டிற்காக ஊதியம் வழங்கப்பட்டு வருகின்றனர்.

சாரணர்இயக்கம், சஞ்சாயிகா முதலியன நன்முறையில் நடைபெற்று வருகின்றன.

## உடற்கல்வி.-

1986-ல் குறுவட்டப் போட்டிகளில் மாணவியர் குண்டு எறிதலில் முதலிடமும் ஈட்டி எறிதலில் இரண்டாவது இடமும், தட்டெறிதலில் 2-ஆம் இடமும் பெற்றனர். 87-ல் மாவட்டப் போட்டிகளில் நீளம் தாண்டுதலில் முதல் இடமும் குண்டெறிதலில் இரண்டாம் இடமும் 4×100 மீ தொடர் ஓட்டத்திலும் கபடி விளையாட்டுப் போட்டியிலும் முதலிடமும் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளனர். கபடி முதலிடத்திற்காகச் சுழற்கேடயம் பெறப்பட்டது. கிராமப் புற விளையாட்டுப் போட்டியிலும் முதலிடமும் பெற்றது. மாநில அளவிலான குடியரசு தின விழா விளையாட்டுப் போட்டியில் நீளம் தாண்டுதலில் ஒரு மாணவி கலந்து கொண்டாள்.

88-ல் குண்டெறிதலில் இரண்டாவது இடமும் இளநிலையினருக்கான 4×100 மீ தொடர் ஓட்டத்தில் இரண்டாவது இடமும் மாணவியர் பெற்றனர்.

90–91 ஆம் ஆண்டில் குறுவட்டப் போட்டிகளில் தட்டெறிதலில் 2-ஆம் இடம் கிடைத்தது. கபடி விளையாட்டில் முதலிடம் பெற்று மாவட்டப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளனர். 92. ஆக 17, 18 ஆகிய தேதிகளில் எம் பள்ளி தேவகோட்டை வட்டார விளையாட்டு மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அழகப்பா உடற்கல்விக் கல்லூரி உமையாள் விளையாட்டு அரங்கில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்துணை வேந்தர் முனைவர் கே. நாகப்பன் தலைமையில் விளையாட்டு விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது. மேலைச் சிவபுரி செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் முனைவர் பழ. முத்தப்பன் அவர்கள் ஏற்றமிகு வாழ்த்துரை வழங்கி வீராங்கனையைப் போற்றினார்கள் 266 மாணவிகள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் நம் பள்ளி மாணவியர் கபடியில் 2-ஆம் இடம் பெற்றனர். அணி வகுப்பில் 3-ஆம் இடம் கிடைத்தது.

## அறிவியல்:-

ஆண்டு தோறும் நடைபெறும் அறிவியல் கண்காட்சிகளில் பள்ளி பங்கேற்று வருகிறது. 91-ல் 8 வது அறிவியல் கண்காட்சியில் பணப்பரிசாக ரூ 30 கிடைத்துள்ளது.

## நூலகம்:-

நூலகத்திலுள்ள பெரும்பாலான நூல்கள் தங்கத் தமிழ் வளர்க்கும் சரசுவதி சங்கத்தாரால் வழங்கப்பட்டவை. மேலும் அவ்வப்போது ஒவ்வொரு துறைக்கும் ஏற்றநூல்கள் வாங்கப்பட்டு வருகின்றன.

## சத்துணவு :-

சத்துணவுத்திட்டம் நன் முறையில் செயல்படுகிறது.

## மாணவியர் தொகை

80 மாணவியருடன் துவங்கப்பட்ட இப்பள்ளி ஆண்டுதோறும் மாணவியர் தொகை மிகுதியாகி இன்று பள்ளி 534 மாணவியருடன் நிரம்பட இயங்கி வருகிறது.

## அறிவொளி இயக்கம்:-

7-10-91—8-10-91 ஆகிய நாட்களில் பள்ளியில் அறிவொளி இயக்கப் புத்துணர்ச்சி முகாம் நடைபெற்றது. மாணவியர் இதில் பயிற்சி பெற்றுக் கல்லாமையை இல்லாமல் ஆக்கும் அறிவொளி இயக்கப்பணி ஆற்றி வருகின்றனர்.

# நன்றியுரை

ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் 70 ஆம் ஆண்டு விழாவில் அறிக்கைமலர் முகிழ்த்துமலர ஒல்லும் வகையால் நல்உதவிகள் பல, அரிய உள்ளங்களால் அள்ளித் தந்த உத்தமர்கள் பலப்பலர், அவர்கள் ஒவ்வொருவரையும் உள்ளார்ந்த நன்றிப் பெருக்கான உணர்வுடன் நினைவு கூர்வதில் பெருமை அடைகிறோம்.

தமிழக அரசின் தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு S. ரகுபதி B.Sc.B.L. அவர்கள் அறிக்கைமலரை ஆன்றவிந்தடங்கிய சான்றாண்மை உள்ளத்தோடு வெளியீடு செய்து சங்கத்தின் பெருமை துங்கமிகுதரணிக்கெல்லாம் தோற்றமிகு எழிலாகத் திகழச் செய்தமையை என்றும் மறவாது நன்றி உள்ளத்தராய்ச் சங்கம் நடைபயில்கிறது.

சரசுவதி சங்கத்தின் அங்கங்களாக விளங்கும் கல்விக் கூடங்கள் நனி சிறக்க நாளும் நாடும் பொருள் பல வள்ளன்மை உள்ளத்தோடு வாரி வழங்கிய பெருமக்கள் அனைவருக்கும் நன்றி.

அறிக்கைமலர் மணம் பெற ஆங்காங்கே தங்கள் பெருமிதம் மிக்க வாழ்த்தோடு விளம்பரங்கள் பல தந்து, மலருக்கு விளக்கமாகச் சரசுவதி சங்கத்தையும், சங்கத்திற்கு உறுதுணையாக விளங்கும் உறுப்பினர்களையும், நிர்வாகக் குழுவினரையும் மாட்சிமை பெறச் செய்த அன்பர்கள் அனைவருக்கும் நன்றி.

மலரின் மணமும் மணியின் ஒளியும் எழில் தவழச் செய்தல் இன்றியமையாத பணியாம் அப்பணியைச் சிரமேற்கொண்டு காலத்தால் இனிதே களம் பெறச் செய்த மதுரை ரவி அச்சகத்தார்க்கு என்றும் மறவாநன்றி உடையேம்.

தலைவர்
**சித. ராம. சிதம்பரம்**

செயலர்
**பழ. முத்தப்பன்**